www.Padasalai.Net www.TrbTnpsc.com

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024

## எட்டாம் வகுப்பு

நேரம்: 2.30 மணி **தமிழ்** மதிப்பெண்கள்: 100

பகுதி - 1 (மதிப்பெண்கள்: 15)

சரியான விடையைத் தேர்ந்தெடுக்க:- **15×1=15**

1) செவ்விந்தியர்கள் நிலத்தை________ மதிக்கின்றனர்

அ) தாயாக ஆ) தந்தையாக இ) தெய்வமாக ஈ) தூய்மையாக

2) வளைந்த கோடுகளால் அமைந்த மிகப்பழைய தமிழ் எழுத்து ________ என அழைக்கப்படுகிறது.

அ) கோட்டெழுத்து ஆ) வட்டெழுத்து இ) சித்திர எழுத்து ஈ) ஓவிய எழுத்து

3) கல்விப் பயிற்சிக்குரிய பருவம் ________

அ) இளமை ஆ) முதுமை இ) நேர்மை ஈ) வாய்மை

4) உடல் எடை அதிகரிப்பதால் ஏற்படும் நோய்களுள் ஒன்று ________

அ) தலைவலி ஆ) காய்ச்சல் இ) புற்றுநோய் ஈ) இரத்தக் கொதிப்பு

5) "கலனல்லால்" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________

அ) கலன் + லல்லால் ஆ) கலம் + அல்லால்

இ) கலன் + அல்லால் ஈ) கலன் + னல்லால்

6) செஞ்சொல் வள்ளைப்பாட்டிற்கேற்ப முழவை மீட்டுவது

அ) கடல் ஆ) ஓடை இ) குளம் ஈ) கிணறு

7) தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப்பழமையான இலக்கண நூல்

அ) நன்னூல் ஆ) அகப்பொருள் விளக்கம்

இ) தொல்காப்பியம் ஈ) தொன்னூல் விளக்கம்

8) கீழ்க்காணும் சொற்களில் பெயரெச்சம் ________

அ) படித்து ஆ) எழுதி இ) வந்து ஈ) பார்த்த

9) பின்வருவனவற்றுள் ஏவல் வினைமுற்றுச் சொல் ________

அ) செல்க ஆ) ஓடு இ) வாழ்க ஈ) வாழிய

10) இதழ்களைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள் ________

அ) இ, ஈ ஆ) உ, ஊ இ) எ, ஏ ஈ) அ, ஆ

11) ஓவியர் தூரிகை கொண்டு ஓவியம் தீட்டினார். இதில் ________ என்பது சொல்லுருபாக வந்துள்ளது.

அ) ஓவியர் ஆ) தூரிகை இ) ஆல் ஈ) கொண்டு

**பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:**

நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாஅமைத்
திரிவுஇல் சொல்லொடு தழாஅல் வேண்டும்

Scanned with CamScanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



12) இப்பாடலில் நெருப்பைக் குறிக்கும் சொல் யாது?
அ) நிலம் ஆ) நீர் இ) தீ ஈ) வளி

13) இப்பாடல் எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?
அ) திருக்குறள் ஆ) நாலடியார் இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

14) இப்பாடலை இயற்றியவர் யார்?
அ) திருவள்ளுவர் ஆ) சமண முனிவர் இ) தொல்காப்பியர் ஈ) பவணந்தியார்

15) வழாஅமை என்ற சொல்லில் உயிரெழுத்து நீண்டு ஒலித்தது ________ ஆகும்
அ) உயிரளபெடை ஆ) ஒற்றளபெடை இ) வினையெச்சம் ஈ) பெயரெச்சம்

## பகுதி - 2 (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு - 1

ஏவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க:
21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்) 4×2=8

16) விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க
அ) திருமூலர் திருமந்திரத்தை இயற்றினார்.
ஆ) பறவைகள் விசும்பில் பறந்து செல்கின்றன

17) ஒலிய எழுத்து என்றால் என்ன?

18) தாய்நாடு எனும் பெயர் எவ்வாறு பிறக்கிறது?

19) தமிழர் மருத்துவத்தில் மருந்துகளாகப் பயன்படுபவை யாவை?

20) யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை?

21) "விலங்கொடு எனத் தொடங்கும் குறளை அடிமாறாமல் எழுதுக.

### பிரிவு - 2

ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க: 5×2=10

22) எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன?

23) வினைமுற்று என்றால் என்ன?

24) எச்சம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

25) கலைச்சொல் தருக: அ. VOWEL ஆ. PUNCTUATION

26) பொருத்தமான நிறுத்தற்குறியிடுக: பூக்கள் நிறைந்த இடம் சோலை ஆகும்

27) சரியான மரபுச்சொல்லால் நிரப்புக.
அ. தண்ணீர் ________ (குடி/பருகு) ஆ. சுவர் ________ (கட்டு/எழுப்பு)

8) தமிழெண்களை எழுதுக: 23, 87, 91, 40

## பகுதி - 3 (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு - 1

ரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க: 2×3=6

) தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவமாற்றங்களை விளக்குக.

) நோய்கள் பெருகக் காரணம் என்ன?

) பத்தியைப் படித்துப் பதில் தருக:- 1. உ பிறைமி
2. திருந்திரு

Scanned with CamScanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



மூளை, முதுகுத்தண்டில் இருந்து முளைக்கிறது. தண்டிலிருந்து மடிப்பு மடிப்பாக முட்டைக்கோஸ் இலைகள் வருவது போல அல்லது வெங்காயம் போல உள்ளது. இதை மூன்று பாகங்களாக மேம்போக்காகப் பிரிக்கின்றனர். அவை உள்மூளை, நடுமூளை, பின்மூளை. முன்மூளையில் மூக்கு, கண் இவற்றின் முடிவுகள் உள்ளன. உடம்பிலுள்ள சிறுமூளைதான் நம் உடலின் அசைவுகளையும் உணர்ச்சிகளின் வளர்ச்சியையும் கட்டுப்படுத்துகிறது.

1. மூளை எதில் இருந்து முளைக்கிறது?
2. வெங்காயம் போல் உள்ளது எது?
3. உடலின் அசைவுகளைக் கட்டுப்படுத்துவது எது?

பிரிவு - 2

**இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க:**
**(34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்)** **2×3=6**

32) ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?
33) புத்தியைத் தீட்டி வாழவேண்டிய முறைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?
34) **“வாழ்க நிரந்தரம்.....”** எனத் தொடங்கும் பாடலை அடிமாறாமல் எழுதுக.

பிரிவு - 3

**இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க:** **2×3=6**

35) ஏவல் வினைமுற்றுக்கும், வியங்கோள் வினைமுற்றுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?
36) முற்றெச்சத்தைச் சான்றுடன் விளக்குக
37) நான்காம் வேற்றுமை உணர்த்தும் பொருள்கள் யாவை?

பகுதி - 4 (மதிப்பெண்: 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க:-** **5×5=25**

38) அ) தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) உடல்நலத்துடன் வாழக் கவிமணி கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

39) அ) விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக. **(அல்லது)**

ஆ) இரண்டு நாட்கள் விடுப்பு வேண்டி வகுப்பாசிரியருக்கு விடுப்பு விண்ணப்பம் எழுதுக.

40) அ) மரபுப் பிழையை நீக்கி எழுதுக.

**சேவல் கொக்கரிக்கும் சத்தம் கேட்டுக் கயல் கண் விழித்தாள். பூப்பறிக்க நேரமாகி விட்டதை அறிந்து தோட்டத்திற்குச் சென்றாள். அங்கு மரத்தில் குயில் கரைந்து கொண்டிருந்தது. பூவைப் பறித்தவுடன் தோரணம் கட்ட மாவிலையையும் கொய்து கொண்டு வீடு திரும்பினாள். அம்மா தந்த பாலைக் குடித்துவிட்டுப் பள்ளிக்குப் புறப்பட்டாள்.** **(அல்லது)**


Scanned with CamScanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com




ஆ) படங்களுக்குப் பொருத்தமான திருக்குறள்களை எழுதுக.

அ.



ஆ.



விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்

41) சொற்களை ஒழுங்குபடுத்தி முறையான தொடராக்குக

1. வட்டெழுத்து எனப்படும் தமிழ் கோடுகளால் வளைந்த அமைந்த எழுத்து
2. உலகம் தமிழ்மொழி வாழட்டும் உள்ளவரையிலும்
3. வென்றதைப் பரணி பகைவரை ஆகும் பாடும் இலக்கியம்
4. கழுத்து பிறக்கும் இடம் உயிரெழுத்து ஆகும்
5. ஏகலை கலையை அம்புவிடும் தமிழ் என்றது.

42) இளமைப்பெயர்களை எழுதுக. அ) புலி ஆ) சிங்கம் இ) யானை ஈ) பசு உ) ஆடு

## பகுதி - 5 (மதிப்பெண்:24)

அனைத்து வினாக்களுக்கு விடையளிக்க:- **3×8=24**

43) அ) எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ) தமிழ் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

44) அ) வெட்டுக்கிளியும், சருகுமானும் கதையைச் சுருக்கி எழுதுக.

(அல்லது)

ஆ) திருக்குறளின் கருத்தைப் பின்பற்றி நடந்த சகாதேவன் கதையைச் சுருக்கி எழுதுக.

45) அ) கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

முன்னுரை - நூலகத்தின் தேவை - வகைகள் - நூலகத்திலுள்ளவை - படிக்கும் முறை - முடிவுரை

(அல்லது)

ஆ) "நான் விரும்பும் கவிஞர்" என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

********

Padasalai.Net

Scanned with CamScanner

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com